# அநுராதபுர மாநகர சபை
## அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 06 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 19 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அநுராதபுர மாநகர சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2010 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் களஞ்சிய விநியோக கணக்குவைத்தல் என்பவற்றிற்காக நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவுகள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 01 | 1,519 | - | - | - |
| (ii) | நிதிக்கூற்றுகளில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 09 | - | - | 8,203 | - |
| | - மேற்படி - | 02 | - | 3,038 | - | - |
| (iii) | நிதிக்கூற்றுகளில் விடுபாடுகள் | 30 | - | - | 2,562 | - |
| | - மேற்படி - | 01 | - | - | - | 8,856 |
| | - மேற்படி - | 02 | - | 32,291 | - | - |
| | - மேற்படி - | 01 | 31,514 | - | - | - |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 08 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 150,940,714 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 150,742,597 ஆக இருந்தது.

(ஆ) மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 61,790,676 ஆக இருந்ததுடன் நிலையான சொத்துக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 61,903,153 இருந்தது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

மாநகர சபையில் கடமைபுரிந்த ஊழியர்களுக்காக 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய பிரிவிற்கு செலுத்த வேண்டிய நிலுவை பங்களிப்புத் தொகை ரூபா 21,695,090 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 17,783,090 ஆனது 1991 இலிருந்து 2002 வரையான காலப்பகுதிக்கான பங்களிப்புப் பணமாகும்.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 116,438,221 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| (i) நி.பி 371(2) | செயல் நிமித்த உபகட்டுநிதியானது வழங்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்ததும் உடனடியாகவே தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2006,2007,2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 603,360 ஆன உபகட்டுநிதியானது 2010 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நி.பி 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய கணக்கு இல. 1472600 என்ற கணக்கில் ரூபா 7,624,036 பெறுமதியான 357 காசோலைகளும் இல. 1471847 என்ற கணக்கில் ரூபா 116,168 பெறுமதியான 21 காசோலைகளும் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.3.6 தீர்வுசெய்யப்படாத கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1997 சனவரி 01 ஆம் திகதி முதல் அனுராதபுரம் நகரசபை தாபிக்கப்படும் போது நகர சபைக்கு பொறுப்பேற்கப்பட்டிருந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றை 2002 ஏப்ரல் 16 ஆம் திகதி முதல் மாநகர சபைக்கு பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும், அக்காலப் பகுதிக்குரிய ரூபா 2,072,400 பெறுமதியான 06 விடயங்களுக்குரிய கணக்கு மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 33 ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) 1988 இன் 38 ஆம் இலக்க மின்சார பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அப்போதைய அநுராதபுரம் நகர சபையின் மின்சாரத்தை பகிர்ந்தளிக்கும் முறைமை மற்றும் குறித்த சொத்துக்கள் என்பவற்றை மின்சார சபைக்கு பொறுப்பேற்கும் போது அவ்வாறு பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதிக்காக தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 6,184,491 தொகையை தீர்வு செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அறவிடவேண்டிய பயன்பாட்டுச் சேவைகளின் கீழ் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 88,867,923 ஆன பெறவேண்டிய தொகை 07 வருடங்களுக்கும் மேலான காலத்திலிருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இத் தொகையினை அறவீடு செய்ய மாநகர சபையினால் இயலாதிருந்தது.

(ஈ) அநுராதபுரம் மாநகர சபையினால் மின்சார வழங்கலை மேற்கொண்ட காலப்பகுதியில் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரிகளிடமிருந்து இணைப்புக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. மின்சார இணைப்பை வழங்கியதன் பின்னர் வேலைப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு கணக்கிடப்படாமையால் ரூபா 16,199,673 தொகையை மீளச்செலுத்த வேண்டிய வைப்பாக 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தன.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,844,991 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,071,582 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

மாநகர சபையின் வேலைகள், வழங்கல் மற்றும் சேவைகள் தொடர்பாக நிதி அதிகாரக் கையளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 27,871 | 16,711 | 45,004 | 31,931 | 24,820 | 43,193 |
| (ஆ) | வாடகை | 7,397 | 1,910 | 5,487 | 12,292 | 9,200 | 24,962 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,958 | 5,463 | 2,594 | 12,726 | 12,550 | 2,424 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 48,671 | 41,569 | 35,955 | 45,720 | 62,400 | 11,916 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றங்களினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு வடமத்திய மாகாணத்தின் பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 2,508,160 ஆன தண்டப்பணத் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்தினால் வடமத்திய மாகாணத்தின் பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தும் மாகாண திறைசேரியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 884,824 ஆன முத்திரைக் கட்டணங்கள் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.3.4 நிலுவையாகக் காணப்பட்ட ஆதனவரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 45,004,389 ஆன நிலுவை ஆதனவரியினை அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 வாகனத் தரிப்பிடங்களை வாடகைக்கு விடல்

2010 ஆம் ஆண்டிற்காக மாநகர சபைக்குச் சொந்தமான வாகனத் தரிப்பிடங்களை வாடகைக்கு விடும் அடிப்படையில் செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளின் பிரகாரம் தகுதியான கேள்விதாரர்களினால் முழுமையான கேள்வித் தொகையும் அதற்குரிய வாடகைப் பணமும் ஒரே தடவையில் செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மாநகர சபையினால் முன்னைய ஆண்டுகளில் இவ்வாறே 05 வாகனத்தரிப்பிடங்களுக்குரிய கேள்விப்பணம் ரூபா 2,993,773 தொகையில் 1/3 மாத்திரம் ஒரே தடவையில் அறவிடப்பட்டு மிகுதிப் பணம் பகுதியாகச் செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் செய்திப் பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்ட அந் நிபந்தனையினால் கேள்விதாரர்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட செயற்பாடொன்றாக இது அவதானிக்கப்பட்டது.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 107,658 | 103,835 | 3,823 | 97,254 | 99,794 | (2,540) |
| ஏனையவை | 52,394 | 50,596 | 1,798 | 47,887 | 51,212 | (3,325) |
| உப மொத்தம் | 160,052 | 154,431 | 5,621 | 145,141 | 151,006 | (5,865) |
| மூலதனச் செலவினம் | 36,062 | 15,514 | 20,548 | 14,374 | 3,190 | 11,184 |
| மொத்தம் | 196,114 | 169,945 | 26,169 | 159,515 | 154,196 | 5,319 |

## 2.5 மிகை அறவீடு

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 226(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த ஆட்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மிகை அறவீடுகளின் பெறுமதி ரூபா 663,103 ஆக இருந்தது.

## 2.6 மனித வள முகாமைத்துவம்

### 2.6.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

(அ) 2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **பதவியினர் தரங்கள்** | **அங்கீகரிக்கப்பட்ட** | **உள்ளவாறான** |
|---|---|---|---|
| (i) | பதவி நிலைத்தரங்கள் | 03 | 03 |
| (ii) | இரண்டாம் தரங்கள் | 50 | 44 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 417 | 324 |
| (iv) | ஏனைய (அமைய / தற்காலிக) | - | - |
| | | 470 | 371 |

**(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சியமை**

நூலகர், பொது சுகாதார பரிசோதகர் மற்றும் அலுவலக உதவியாளர்கள் போன்ற பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 14 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இம் மேலதிக ஊழியர்களுக்காக 2010 ஆம் ஆண்டின் போது சம்பளமாக ரூபா 2,978,660 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தியமை**

மாநகர சபையின் உத்தியோகபூர்வ விடுதிப் பொறுப்பாளர் மற்றும் பாதுகாவலர் பதவிகளுக்காக அங்கீகரிக்கப்படாது பதவியினர் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 2010 ஆம் ஆண்டில் சம்பளமாக ரூபா 2,875,860 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) பதவிகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுத்தாமல் வேறு பதவிகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுத்தியமை**

மாநகர சபைக்காக முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 20 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 16 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். 04 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் தொழிலாளர் பதவிகள் மற்றும் காரியாலய உதவியாளர் பதவிகளின் கீழ் சேர்க்கப்பட்டிருந்த 46 ஊழியர்கள் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பதவிகளுக்குரிய கடமைகளில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 2.7 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.7.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

அரிசி மாவின் இணை உற்பத்திகளை பிரபல்யமடையச் செய்யும் செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக வடமத்திய மாகாண பிரதம அமைச்சிலிருந்து 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 350,000 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2010 திசெம்பர் 31 வரையிலும் அச் செயற்திட்டம் செயற்படுத்தப்படாதிருந்தமையினால் அவ் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.7.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 105,247,049 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்திற்கு மேற்பட்டிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 87,788,030 ஆக இருந்தது.

### 2.7.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,206,263 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 214,823 ஆக இருந்தது.

### 2.7.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீகபரீட்சிப்பு / மெய்யையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 68,766,370 ஆக இருந்தது.

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பொதுச் சந்தையின் பிரீமன் மாவத்தைக்கு முன்பாக மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் 09 கடைகளை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம்

வழங்கப்பட்டிருந்த போதிலும் 12 கடைகள் நிர்மாணிக்கப்பட்டு அதில் 08 கடைகள் அங்கீகாரம் பெறப்படாத நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

## 2.9 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் பணம் உரிய திகதியில் செலுத்தாமையின் காரணமாக எழுந்த வட்டி மற்றும் தண்டப் பணங்களை பதிவழிப்பதற்காக ஆராய்ந்து பார்க்கும் பிணக்குகள் சபைக்கு கட்டணம் மற்றும் சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 91,927 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதாவது நிலையத்தில் பொருட்கள் அல்லது சேவைகள் உற்பத்தி விற்பனை அல்லது பகிர்ந்தளித்தல்களுக்காக ஈடுபடும் அதாவது ஒரு வாடகையாளர்களுக்கான அனுமதியானது மாநகர சபையினால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தால் மாத்திரமே முடியுமாகும். 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அவ்வாறான செயற்பாடுகளுக்காக நிலையங்களை உபயோகின்ற 190 பேர்களிடமிருந்தும் ரூபா 508,200 ஆனது கிடைக்கவேண்டியிருந்தது.

(இ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 127 ஆவது பிரிவு, 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக் கோவையின் 67 ஆவது கட்டளையின் பிரகாரம் இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படாமல் விடோன்றில் குடியிருக்க முடியாதிருந்தும் மாநகர சபையினால் கட்டிட அனுமதிப்பத்திரம் பெற்ற நபர்கள் இணக்கச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்காமல் குடியிருந்தமை தொடர்பாக போதியளவான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 206 ஆவது பிரிவின் பிரகாரம் ஏதாவது காலப்பகுதியொன்றுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் நிதி பெறப்படும் வரை செலவினங்களைத் தீர்க்கும் செயற்பாடுகளுக்காக தற்காலிக கடனாக மேலதிகப் பற்று வசதியைப் பெறமுடியுமாக இருந்த போதிலும் மாநகர சபைக்குரிய மக்கள்

வங்கியின் 1472600 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கிலிருந்து தொடர்ந்து மேலதிகப் பற்று வசதி பெறப்பட்டிருந்தது.

**2.10 செயலாற்றல்**

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) 04 ஆவது பிரிவின் பிரகாரம் கையளிக்கப்பட்ட பொது சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவை மற்றும் பொது வீதிகள், பொது நலன் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக மாநகர சபையினால் சில வருடங்களுக்குரிய முறையில் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மற்றும் அத்திட்டத்திற்குரிய மீளாய்வாண்டினுள் அமுல்படுத்துவதற்குத் தேவையான செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் சபைக்கு கையளிக்கப்பட்ட செயற்பாடுகள், திட்டங்கள் மற்றும் இலக்குகளின் பிரகாரம் அமுல்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

**2.11 ஒப்பந்த நிருவாகம்**

பிரீமிக்ஸ் போடப்பட்டு வீதிகளைப் பராமரிப்பதற்குத் தேவையான ‘‘பிரீமிக்ஸ்’’ மாநகர சபையினாலேயே தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டின் போது அதற்கு அவசியமான தார், 3/4 சிப்ஸ் மற்றும் மணல் என்பன கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,480,830 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருட்கள், கூலிகள் மற்றும் பொதுச் செயற்பாடுகள் என மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் உற்பத்தி செய்யப்பட்ட பிரீமிக்ஸ் அளவு எவ்வளவு என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஏடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.12 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு